1974 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அத்தகைய செயற்குறிப்பு இல்லை. இதற்கு அதிகப் பணம் செலவாகும் என்பதால் அரசு அதைப் பரிசீலிப்பதற்கில்லை.

திரு. கு. காமாட்சி : அது திருச்சிப் பகுதியையும் தஞ்சைப் பகுதியையும் இணைக்கும் ஒரு பாலமாகும். அங்கில்லாவிட்டாலும் பக்கத்தில் வேறு இடத்திலாவாது பாலம் கட்டித்தந்து அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்பை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புதிதாகக் கேட்கிறுர்கள். அதுபற்றி அரசுக்கு எழுதியனுப்பினுல் அரசு பரிசீலிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : புதிதாக மேகனத்தூரில் வெண்ணுற்றில் ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்தச் சாலையையாவது தொடர்புபடுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அதுபற்றித் தகவல் இல்லை.

பழவாற்று உபரி நீர்.

* 461 விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் தாலுக்கா பழவாற்றின் மிகுதி நீரை மாயூரம் தலைஞாயிறி லிருந்து கொள்ளிடத்தில் சேர்ப்பித்திடுவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பழவாற்றிலிருந்து உபரித் தண்ணீரைக் கொள்ளிடத்தில் சேர்ப்பித்திடுவதற்கான திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : இந்தப் பழவாற்றில் வெள்ளக் காலத்தில் வருகிற தண்ணீரால் பழவாற்றுக்கரை உடைந்து விடுகிறது. அதைத் தவிர்க்கும் வகையில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டிலாவது அந்தத் தண்ணீரை கொள்ளிடத்தில் சேர்ப்பிக்கக்கூடிய விதத்தில் புதிய ஒரு ஏற்பாட்டினைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : அது சாத்தியக்கூறல்ல என்பதைத் தான் தெரிவித்தேன். அதிகாரிகளும் தெரிவித்திருக்கிறுர்கள். பழ வாற்றைவிட கொள்ளடத்தில் உள்ள நீர்மட்டம் உயரமாக இருப்பதால் நீரை ஏற்றித்தான் கொண்டு சேர்க்க வேண்டும். அது இயலாது. பழ வாற்றங்கரையைச் செப்பனிடுவதற்கும், தேவையான இடங்களில் வடிகால் கள் அமைக்கவும் வேலைகள் தொடங்கப்பட்டு பெரும்பாலும் முடிவடைந்து கொண்டிருக்கின்றன.